**அழகாபுரி ஊராட்சிமன்றத் தலைவர் அவர்களின் நடவடிக்கைகள்**
**முன்னிலை: திருமதி.. V.அழகுத்தாய்**

* * * * *

**அழகாபுரி.ஊ.ந.க.எண்:** **நாள்: .03.2024**

பொருள்: மனைப்பிரிவு - விருதுநகர் மாவட்டம் - விருதுநகர் ஊராட்சி ஒன்றியம் - அழகாபுரி ஊராட்சி - அழகாபுரி கிராமம் சர்வே எண்கள்: 72/2A–ல் 1.51 ஏக்கர் (6100.00 ச.மீ) பரப்பளவில் அமையும் குடியிருப்பு மனைப்பிரிவுகளுக்கான அனுமதி/இசைவு ஒப்புதல் வழங்கப்பட்டது - கட்டணங்கள் செலுத்தப்பட்டது - இறுதி ஒப்புதல் வழங்கி உத்தரவிடல்.

பார்வை: 1) விருதுநகர் மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலக துணை இயக்குநரின் இணையதள கடிதம் எண்: 80PIERQO/2024/TCP, நாள்: 20.02.2024.
2) அழகாபுரி ஊராட்சிமன்றத் தலைவரின் ஆய்வு நாள்: 01.03.2024
3) மனுதாரர் கட்டணங்கள் செலுத்திய ரசீது எண் மற்றும் நாள்: —

* * * * *

**உத்தரவு :**

விருதுநகர் மாவட்டம், விருதுநகர் வட்டம், விருதுநகர் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட அழகாபுரி ஊராட்சி, அழகாபுரி கிராமம் சர்வே எண்கள்: 72/2A–ல் 1.51 ஏக்கர் (6100.00 ச.மீ) பரப்பளவில் அமையும் உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவுக்கான தொழில்நுட்ப ஒப்புதல் பார்வை(1)-ல் காணும் இணையதள கடிதத்தின்படி நகர் ஊரமைப்புத் துறையினால் வழங்கப்பட்டுள்ளது.

அதன்படி, பார்வை(2)-ல் காணும் விபரப்படி, விருதுநகர் வட்டம் அழகாபுரி ஊராட்சி, அழகாபுரி கிராமம் சர்வே எண்கள்: 72/2A–ல் 1.51 ஏக்கர் (6100.00 ச.மீ) பரப்பளவில் அமையும் மனைப்பிரிவு எண்கள்: 1 முதல் 27 வரை (மொத்தம் 27 எண்ணம்) ஆகியவைகளுக்கு கீழ்க்காணும் விபரப்படி நிபந்தனைகளுக்கு உட்பட்டு இறுதி ஒப்புதல் வழங்கி இதன் மூலம் உத்தரவிடப்படுகிறது.

| சர்வே எண் | வரன்முறை செய்யப்படும் பிளாட் எண்கள் | பிளாட்களின் மொத்த எண்ணிக்கை | மொத்தப் பரப்பளவு (ச.மீ) |
|---|---|---|---|
| 72/2A | 1 முதல் 27 வரை | 27 | 4094.77 |

**நிபந்தனைகள் :**

1) நில உரிமம் குறித்து வழங்கப்பட்ட சான்றுகள் மற்றும் பரிசீலணைக்கு சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் சரியானவை அல்ல என அறியப்பட்டால் அல்லது மனைப்பிரிவுக்கு இறுதி ஒப்புதல் வழங்கியதால் பாதிப்பு ஏற்படக்கூடிய சூழ்நிலை ஏற்படின் மனைப்பிரிவுக்கு வழங்கப்பட்ட இறுதி ஒப்புதல் ரத்து செய்யப்படும்.
2) விற்பனைக்கு உரிய மனைகளை விற்பனை செய்யும்போது நகர் ஊரமைப்புத் துறையில் ஒப்புதல் அளிக்கப்பட்ட வரைபட நகலினை மனை வாங்குபவர்களுக்கு கட்டாயம் வழங்கப்பட வேண்டும்.
3) நீர்நிலைகள் பாதிக்கப்படாத வண்ணம் கட்டிடம் கட்டப்பட வேண்டும்.
4) வரைபடத்தினை எந்த வித மாற்றம் இன்றி மனைப்பிரிவு நுழைவாயிலில் நிரந்தர தகவல் பலகை மூலம் பொதுமக்கள் பார்வைக்கு நிரந்தரமாக வைக்கப்பட வேண்டும்.

V. அழகுத்தாய்

**ஊராட்சி மன்றத் தலைவர்**
**அழகாபுரி ஊராட்சி**

தலைவர்
அழகாபுரி ஊராட்சி
விருதுநகர் ஊராட்சி ஒன்றியம்

(முத்திரை: அழகாபுரி ஊராட்சி, விருதுநகர் ஒன்றியம் — நாள்: 7/3/2024)

**பெறுநர்:**

திரு.A.உதயகுமார்,
த/பெ.அழகர்சாமி,
13,விக்னேஸ்வரர் நகர்
2-வது வீதி, புழுதிவாக்கம், மடிப்பாக்கம்,
சென்னை - 600 091

**நகல்:**

1) மாவட்ட நகர் ஊரமைப்புத் துறை, விருதுநகர்.
2) இணை பதிவாளர், எண்-1, சார்பதிவாளர் அலுவலகம், விருதுநகர்.
3) அழகாபுரி ஊராட்சி மனைப்பிரிவு அங்கீகாரம் வழங்கும் பதிவேடு.
4) வட்டார வளர்ச்சி அலுவலர்(கி.ஊ), விருதுநகர் ஊராட்சி ஒன்றியம்.